# தேர்ச்சி - நான்கு:-
# ஆற்றல் மிக்க செபத்தில் ஈடுபடுவர்

22

## 4.3 கேட்பவை தரப்படும்

அவர் ஒரு பார்வை அற்றவர். பிச்சையெடுத்து வாழ்ந்து வந்தார். அவரது பெயர் பர்த்திமேயு. எரிகோ நகரில் வழியோரத்தில் அமர்ந்திருந்தார்.

இயேசு தம் சீடரோடு அவ்வழியே செல்வதாக அவர் மக்களைக் கேட்டு அறிந்து கொண்டார். அவர்கள் தனக்கு அண்மையில் செல்வதை அவர் உணர்ந்தார். உரத்த குரலில் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

இயேசுவே, தாவீதின் மகனே எனக்கு இரங்கும்



பார்வையற்றவர் தொடர்ந்தும் வேண்டினார். பேசாதிருக்குமாறு பலர் அவரை அதட்டினர். ஆனால் அவர் இன்னும் உரக்கக் கத்தினார். இயேசு நின்று அவரைக் கூப்பிடுங்கள் என்று கூறினார். தம்மிடம் வந்த பார்வையற்றவரைப் பார்த்து இயேசு உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்? என்று கேட்டார்.

ரபூனி நான் மீண்டும் பார்வை பெற வேண்டும் என்றார். இயேசு பார்வையற்றவரின் வேண்டுகோளை நிறைவேற்றினார். அக்கணமே பர்த்திமேயு பார்வை பெற்றார். பார்வை பெற்ற அவர் இயேசுவைப் பின்பற்றி அவருடன் வழி நடந்தார்.

கேளுங்கள், உங்களுக்கு கொடுக்கப்படும்.




அவர் ஒரு நூற்றுவர் தலைவர். அவர் மிகவும் அன்பு செய்த பணியாளர் ஒருவர் நோயுற்று மரிக்கும் தருவாயிலிருந்தார். கப்பர்நாகுமுக்குச் சென்ற இயேசுவை அவர் சந்தித்தார்.

தம் பணியாளரைக் குணப்படுத்துமாறு இயேசுவிடம் அவர் கேட்டார். இயேசு அவரிடம், நான் வந்து அவரைக் குணமாக்குவேன் என்றார். நூற்றுவர் தலைவர் மறுமொழியாக, ஐயா, நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லும், என் பணியாளர் நலமடைவார் என்றார். இந்த நூற்றுவர் தலைவரின் நம்பிக்கையை இயேசு வியந்து இவ்வாறு கூறினார். இஸ்ரயேலரிடத்திலும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை. நீர் நம்பிய வண்ணமே உமக்கு நிகழும். அந்நேரமே பணியாளர் குணமடைந்தார். நூற்றுவர் தலைவரின் நம்பிக்கைக்குக் கைம்மாறு கிடைத்தது.

**கேளுங்கள், உங்களுக்கு கொடுக்கப்படும்.**

மரண தண்டனை பெற்ற வேறு இரண்டு குற்றவாளிகளையும் யேசுவோடு கொண்டு சென்றார்கள். மண்டை ஓடு எனப்படும் இடத்திற்கு வந்ததும் அங்கே அவரையும் வலப்புறம் ஒருவனும் இடப்புறம் ஒருவனுமாக அக் குற்றவாளிகளை அவர்கள் சிலுவையில் அறைந்தார்கள்.



வலப்புறமிருந்த குற்றவாளி இயேசுவிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தான். இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும் போது என்னை நினைவிற் கொள்ளும். இவ்வேண்டுகோளுக்கு இயேசுவும் செவிசாய்த்தார்.

நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன் என்றார்.

**கேளுங்கள், உங்களுக்கு கொடுக்கப்படும்.**




அன்று மாலை கால நிலை சீராக இருந்தது. இயேசுவும் சீடரும் படகிலேறி மறுகரைக்கு செல்வதற்காக கலிலேயா கடலில் பயணித்தார்கள். படகு போய்க் கொண்டிருந்த போது கடல் நடுவில் பெரும் புயல் அடித்தது. படகு நீரால் நிரம்பியது. இயேசு படகிலே ஆழ்ந்து துாங்கி விட்டார். படகோடு தாமும் மூழ்கி இறந்து போவதாக பயந்த சீடர் இயேசுவை எழுப்பினர். ஆண்டவரே, காப்பாற்றும் சாகப் போகிறோம் என்று வேண்டினர். இயேசு எழுந்து காற்றையும் கடல்கொந்தளிப்பையும் நோக்கி, இரையாதே அமைதியாயிரு என கட்டளையிட்டார். அப்போது காற்று அடங்கியது. மிகுந்த அமைதி உண்டாயிற்று. சீடர் வியந்தனர். அவர்களது பயம் நீங்கியது.

**கேளுங்கள், உங்களுக்கு கொடுக்கப்படும்.**

முதிர் வயதுடைய ஆபிராம் ஆண்டவரிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். அந்த வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது. முதிர் வயதினையுடைய அவரது மனைவி சாரா ஒரு குழந்தையைப் பெற்றாள். அக் குழந்தையின் பெயர் ஈசாக்.

மேலும் ஆபிராம் சோதோம், கொமோரா ஆகிய நகரங்களுக்கு ஏற்பட இருந்த அழிவிலிருந்து அந் நகரங்களை மீட்பதற்காக இறைவனிடம் இரந்து மன்றாடினார்.

பாவத்தின் காரணமாக அந் நகரங்கள் இரண்டும் அழிய இருந்தாலும் அங்கு வாழ்ந்த பக்தியான குடும்பம் இறை பாரமரிப்பைப் பெற்று காப்பாற்றப்பட்டன.



**கேளுங்கள், உங்களுக்கு கொடுக்கப்படும்**

இது வரை நீங்கள் வாசித்த நிகழ்வுகளின் படி நீங்கள் கேட்பவை கொடுக்கப்படும் என்பதை அறிந்துள்ளீர்கள்.

**கேட்பவை தரப்படும் என இயேசு எமக்கு உறுதியளித்துள்ளமை பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**கேளுங்கள். உங்களுக்கு கொடுக்கப்படும். தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில் கேட்போர் எல்லாரும் பெற்றுக் கொள்கின்றனர். தேடுவோர் கண்டடைகின்றனர். தட்டுவோருக்குத் திறக்கப்படும். உங்களுள் எவராவது ஒருவர் அப்பத்தைக் கேட்கும் தம் பிள்ளைக்குக் கல்லைக் கொடுப்பாரா? அல்லது பிள்ளை மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா? தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பாரல்லவா?**

**(மத்தேயு 7:7–11)**

**நினைவிற் கொள்ளவும்**

- **நீங்கள் கேட்க வேண்டியவை எவை?**

☆ எமது அன்றாட தேவைகள்

☆ தவறுகளுக்கு மன்னிப்பு

☆ தீமையில் விழாமல் இருக்க பாதுகாப்பு

☆ மற்றவர்களுடைய நலன்

☆ இறை விருப்பத்தை ஏற்றுக் கொள்ள ஆன்ம வலிமை

- **நீங்கள் எவ்வாறு கேட்க வேண்டும்?**

  ☆ நிலையான விசுவாசத்தோடு

  ☆ இடைவிடாமல்

  ☆ உறுதியான நம்பிக்கையோடு

  ☆ இறைவிருப்பத்தை ஏற்றுக்கொள்ளும் ஆன்ம வலிமையோடு

  ☆ அமைதியோடு

  ☆ தனது பலவீனங்களையும் பாவங்களையும் ஏற்றுக்கொண்டு

**இயேசுவின் முன்மாதிரிகை**

"இயேசுவின் வேண்டல்" செபம் (யோவான் 17) மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளது.

1. தமது மறைப்பணி பற்றி இயேசு தந்தையை நோக்கி வேண்டுகிறார் (யோவா. 17:1-5)
2. தமது சீடருக்காக வேண்டுகிறார் (யோவா. 17:6-19)
3. திருச்சபைக்காக வேண்டுகிறார் (யோவா. 17:20-26)

இறைவனிடம் நாம் கேட்கும் வேண்டுதல்கள் எமது சுய நலனுக்காக அல்ல மாறாக எமது சகோதர, சகோதரிகளின் நலனுக்காக கேட்பதாக அமைய வேண்டும் என இவற்றின் வழியாக விளங்கிக்கொள்கிறோம்.

ஆயினும் பல வேளைகளில் நல்லவர்கள், பக்தியுள்ளவர்கள் என நாம் மற்றவர்களுக்கு காட்டிக் கொண்டு பிறரை உதாசீனம் செய்து, எமக்கு நன்மையையும் மற்றவர்களுக்கு தீமையையும் நினைத்து செபிக்கும் நிலைக்கு உள்ளாகிறோம்,

அத்தகையோரை ஏளனம் செய்யும் நீதிக் கதையின் சுருக்கம் பின்வருமாறு கூறுகிறது.

தான் மட்டுமே பக்தியுள்ளவர், நல்லவர், அயலவர் அனைவரும் தீயவர்கள் என்ற நினைவில் ஒருவர் வாழ்ந்தார். தான் பக்தியுள்ளவர் என உலகில் பிரசித்தப் படுத்தியும் அயலவர்களைத் தூற்றியும் அவர் வாழ்ந்து வந்தார்.

அவர் ஒரு நாள் தான் வழிபடும் இறைவனிடம், "கடவுளே, நான் மிகவும் பக்தியுள்ளவனாக வாழ்கிறேன். ஆதலால் நான் கேட்பதைத் தாருங்கள்" என வேண்டினார்.

அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட கடவுள் அதற்கு ஒரு நிபந்தனை விதித்தார். அவர் கேட்டுக் கொள்வதை அளிக்கின்ற அதே வேளை அதனையே இரு மடங்காக அவரது அயலவனுக்கும் தாம் கொடுப்பதாக கூறினார்.

இது அவருக்கு வருத்தமாக இருந்தது. சிந்தித்தார்.

☆ தான் வீடொன்றைக் கேட்டால், தனக்கு வீடு கிடைக்கும் போது அயலவர் இரு வீடுகளைப் பெறுவார்.

☆ தான் வாகனமொன்றைக் கேட்டால் தனக்கு அது கிடைக்கும் போது, அயலவனுக்கு இரு வாகனங்கள் கிடைக்கும்.

☆ தான் ஒரு கோடி ரூபா கேட்டால், அயலவனுக்கு இரண்டு கோடி ரூபா கிடைக்கும்.

பலவாறு சிந்தித்த பின் கடவுளிடம் தனது ஒரு கண் குருடாக வேண்டுமென கேட்டார். இவ் வேண்டுகோளினால் வியப்படைந்த கடவுள் அவ்வாறு கேட்பதற்கான காரணத்தை வினவினார்.

நிபந்தனைக்கேற்ப தான் கேட்பதெல்லாம் அயலவனுக்கு இரு மடங்கு கிடைப்பதால் தனது ஒரு கண் குருடாகும் போது அயலவனுக்கு இரு கண்களுமே குருடாகும் எனக் காரணத்தைக் கூறினார்.

★ ★ ★

தாம் கேட்பவை கட்டாயம் தமக்கு கிடைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் சிலர் நேர்த்தி வைக்கிறார்கள்.

நேர்த்தி என்பது தமது விருப்பத்தோடு ஏதாவதொரு தியாகம் செய்வதாக வாக்குறுதியளிப்பதாகும். ஆயினும் நேர்த்தி என்பது தமது குறிக்கோளை நிறைவேற்றிய இறைவனுக்கு செய்நன்றியாக வழங்கும் வெகுமதி என இன்று நேர்த்தி வைக்கும் பலர் நினைக்கின்றனர்.

தமது விருப்பத்தை இறைசித்தமாக்குவதே நேர்த்தி வைக்கும் சிலரது எதிர்பார்ப்பாக உள்ளது. ஆயினும் இறைசித்தத்தை எமது விருப்பமாக ஏற்றுக் கொள்வதே கத்தோலிக்கராகிய எமது குறிக்கோளாக இருக்கவேண்டும்.

## இதோ, இயேசுவின் முன்மாதிரிகை



**அப்பா தந்தையே,**
**எல்லாம் உம்மால் இயலும்.**
**இத் துன்பக் கிண்ணத்தை**
**என்னிடமிருந்து அகற்றும்.**
**ஆனாலும் என் விருப்பப்படி**
**அல்ல,**
**உம் விருப்பப்படியே நிகழட்டும்**
**என**
**கெத்சமனித் தோட்டத்தில செபித்த**
**இயேசு**
**எமக்கு முன்மாதிரிகையாக**
**இருக்கிறார்.**

### செயற்பாடு

- பாடத் தொடக்கத்தில் முன்வைத்துள்ள நிகழ்வுகள் ஐந்தையும் மீண்டும் அவதானத்தோடு வாசிக்கவும்.
- நாம் இறைவனிடம் கேட்கும் வேண்டுதல்கள் பற்றி அந்நிகழ்வுகளினூடாக உமக்கு கிடைக்கும் வழிகாட்டல்களை பயிற்சி நூலில் எழுதுக. ஒவ்வொரு நிகழ்வுக்கும் இவ்விரு காரணங்களை முன்வைக்குக.
- பல வேளைகளில் நாம் கேட்கும் அனைத்தும் எமக்கு அருளப்படமாட்டாது. அதற்கான காரணங்கள் பற்றிக் கலந்துரையாடி அக்கருத்துக்களை சுருக்கமாக பயிற்சி நூலில் எழுதுக.